2002 மே 8]

டி.எச். ரோடு மற்றும் கத்திவாக்கம் நெடுஞ்சாலைகளிலும் இப்படி தடையைக் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சொன்ன கருத்தினை நமது போக்குவரத்து காவல் துறையினிடமும், நெடுஞ்சாலைத் துறையினிடமும் தெரிவித்து அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல இன்றைக்கு சென்னை-கொல்கத்தா நெடுஞ்சாலையில் காலையிலே கனரக வாகனங்கள் கூடுதலாக செல்லக்கூடிய காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, 2, 3 மணி நேரம் தடை ஏற்படுகிறது. எனவே வியாசர்பாடியிலே இருக்கக்கூடிய இரயில்வே கடவுப் பாலத்தை, கீழ்ப்பாலத்தை அகலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று கனரக வாகனங்கள் குடிசை மாற்று வாரியப் பகுதியில், சற்று கூடுதலாக இருக்கக்கூடிய சத்தியமூர்த்தி நகர் வழியாகச் செல்வதால் அங்கேயுள்ள கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, மாற்றுப் பாதையில் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாற்றுப்பாதை ஏற்படுத்துவது குறித்து நான் நமது காவல் துறையிடமும் நெடுஞ்சாலைத் துறையிடமும் கருத்துகளைக் கேட்டுப் பெற்று அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அதைப்பற்றி நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315, திரு. கோவை தங்கம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

315—

நிவாரணம்

***7309—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அடங்கிய எஸ்டேட் பகுதியில் யானைகள் புகுந்து வீடுகளை இடித்துத் தள்ளியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) வீடு இழந்துள்ள தொழிலாளர்களின் குடும்பத்திற்கு உடனடி நிவாரணம் தரவும், வீடுகளைக் கட்டித் தரவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, எஸ்டேட் பகுதியிலே யானைகள் புகுந்து வீடுகளைத் தாக்குவது குறித்து அரசினுடைய கவனத்திற்கு வரப்பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட தாக்குதலுக்கு உள்ளான அந்த வீடுகளுக்கு ரூ.5,000/- வரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை High Forest-ல் குடியிருக்கின்ற மாரியப்பன் வீடு, சாலமன் வீடு, கருமலை, வெள்ளமலை, காஞ்ச மலை, உருளிக்கல் போன்ற பல்வேறு எஸ்டேட்டுகளில் பணி புரிகின்ற தொழிலாளர்களுடைய வீடுகள் எல்லாம், யானைகளால் தாக்கப்பட்டு இருக்கின்றன. மேலும், நல்லகாத்து, சிங்கோனா, தாய்முடி போன்ற பள்ளிகளையும், அங்கே இருக்கின்ற சத்துணவுக் கூடங்களையும் யானைகள் இடித்து நொறுக்கிவிட்டன. அதற்கு அருகில் இருக்கின்ற High Forest-லே மருத்துவமனையும் இடிக்கப்பட்டுவிட்டது. மேலும் High Forest-லே கடந்த 1-½ ஆண்டுகளுக்கு முன்பாக கதிர்வேல் என்பவர் யானையால் அடித்து, மிதித்து கொலை செய்யப்பட்டார்......

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொல்லப்பட்டார். அவ்வளவுதான்.

திரு. கோவை தங்கம்: அதேபோல் தாய்முடி எம்.சி. எஸ்டேட்டில் மாரியப்பன் என்பவர் யானையால் கொல்லப்பட்டார். மாண்புமிகு

2002 மே 8]

பேரவைத் தலைவர் அவர்களே, 1½ ஆண்டு காலமாகியும் அந்த High Forest-லே இறந்த கதிர்வேல் என்பவருக்கு மத்திய மாநில அரசுகளுடைய உதவிப் பணம் கிடைக்கவில்லை. ஆகவே. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், உடனடியாக மத்திய அரசை வற்புறுத்தி, யானையால் தாக்கப்பட்டு இறந்தவர் குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணத்தொகை கிடைப்பதற்கு, துரித நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு வற்புறுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்களுக்காக மத்திய அரசிடமிருந்து ரூ.20 இலட்சம் இதுவரை பெறப்பட்டு, தரப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட சம்பவங்களில், தாக்கப்பட்டவர்களுக்கு உதவிட, மத்திய அரசிடம் மாநில அரசு பல்வேறு நிலையிலே வற்புறுத்தி வந்திருக்கிறது. இன்னும் சில காலங்களிலே அந்தத் தொகை வரவிருக்கிறது. வந்தவுடன் அத்தனை பேர்களுக்கும், பாதிக்கப்பட்ட மற்ற அத்தனை பேர்களுக்கும் தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத் தலைவன் யானையால் மிதிபட்டு, இறந்து, அந்தக் குடும்பம் பாழடைந்த பிறகு 1½ ஆண்டு காலமாகியும் அந்தக் குடும்பத்திற்கு மத்திய அரசு உதவி வழங்க முன்வரவில்லை என்று சொன்னால் இனி எப்பொழுதுதான் மத்திய அரசு அந்த நிவாரணத் தொகையை வழங்க முன்வரும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதுவரையில் அந்தக் குடும்பத்தினுடைய நிலை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, உடனடியாக மத்திய அரசு காலதாமதம் செய்யாமல், குடும்பச் சூழலை உணர்ந்து—காடுகளிலே இறக்கின்றவர்கள் சாதாரண ஏழை எளிய தொழிலாளிகள். அவர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு வேறு வழியில்லை என்பதை உணர்ந்து—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் உடனடியாக நிவாரணத் தொகையைப் பெற்று வழங்குவதற்கு உதவிபுரிய முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கூற்று உண்மையாகத்தான் இருக்கும் என்றாலும், மத்திய அரசிடத்திலேதான் இதை வலியுறுத்திட வேண்டும். இதற்கு முன்னால் 50 ஆயிரம் ரூபாயாக இருந்த அந்தத் தொகை, நம்முடைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய

சீரிய பரிசீலனைக்குப் பின்னால், 1 இலட்சம் ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. அது அந்தக் குடும்பத்தினருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 316, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

316—

பயிர் பாதுகாப்பு

***19864—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் காட்டுப் பகுதியில் பயிரை அழிக்கும் காட்டுப் பன்றிகளிடமிருந்து விவசாயிகளின் பயிரைப் பாதுகாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தனூர் காட்டுப் பகுதியில் பயிரை அழிக்கும் காட்டுப்பன்றிகளிடமிருந்து விவசாயப் பயிர்களைக் காக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு நல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ.வ.வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூரை உள்ளடக்கி சாத்தனூர் காட்டுப்பகுதி, Forest Range, பூமலை Forest கல்லமடை Forest என்று 3 Forests Range-லே இருக்கின்றன. கிட்டத்தட்ட சாத்தனூர், வீராணம், சிறுப்பாக்கம், சேர்ப்பாபட்டு, கூடலூர், வானாபுரம், தென்கரும்பூர், கொட்டையூர் ஆகிய கிராம விவசாயிகள் 1,500 ஏக்கராவிலே பயிர் வைக்கிறார்கள். ஆனால் காட்டுப் பன்றிகள் அடிக்கடி வந்து 1500 ஏக்கரா பயிரையும் வீண் செய்துவிட்டு, போய்விடுகின்றன. விவசாயிகளால் அதைத் தடுக்க முடியவில்லை. அப்படித் தடுத்தால், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்கள்மீது